Registered as a Newspaper

பக்கங்கள் 04

விலை ரூபா 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM மக்கள் தினசரி Peoples Daily


நாதம் 04 | திருவள்ளுவர் ஆண்டு 2024 | மார்கழி 03 | (18-12-93) | சனிக்கிழமை | ஓசை 303

## 1500 தமிழ் இளைஞர், யுவதிகள் மொஸ்கோவில் பரிதவிப்பு

ரஷ்ய தலைநகர் மொஸ்கோவில் 1500ற்கு மேற்பட்ட தமிழ் இளைஞர்களும், யுவதிகளும் ஏஜன்சிகளால் கைவிடப்பட்ட நிலையில் செய்வதறியாது தவிப்பதாக தெரிவிக்கப்படுகிறது. கொழும்பிலிருந்து ஜேர்மனி, பிரான்ஸ், சுவிஸ், நோர்வே, கனடா போன்ற பல நாடுகளுக்கும் செல்லும் பொருட்டு ஏஜன்சிகளுக்கு தலா 3லட்சம் முதல் 5லட்சம் வரை செலுத்திய இவர்கள் மொஸ்கோவரை கொண்டுசெல்லப்பட்டு அங்கு வீடுகளில் தங்கவைக்கப்பட்டுள்ளனர். மொஸ்கோஊடாக மேற்படி நாடுகளுக்கு இவர்களை அழைத்து செல்லமுடியாத நிலை ஏற்பட்டதைஅடுத்து ஏஜென்சிகள் தலை மறைவாகி விட்டதாகவும் இதனால்

(3ஆம் பக்கம் பார்க்க)

# வீரச்செயல் புரிந்த போராளிகளுக்கு தலைவர் பரிசில்கள் வழங்கிக் கௌரவம்





## சாதனை புரிந்த 17 போராளிகள் பரிசில் பெற்றனர்

"எமது ஆயுதப் போராட்ட வடிவம் இன்று என்றுமில்லாதவாறு பெரும் வளர்ச்சி கண்டுள்ளது. கெரில்லாப்போர்முறையில் சிறிய அளவிலான தாக்குதல்களை நடத்திவந்த நாம், இன்று பெரிய அளவில் பாரிய படைத்தளங்களைத் தாக்கி அழிக்கும் சக்தி பெற்றவர்களாக முன்னேற்றம் அடைந்துள்ளோம். இந்த அபார மான வளர்ச்சிக்கு வேவுப்பிரிவினர் பங்கு முக்கியமானது. வேவுப்பிரிவினர் பெற்றுத் தரும் தகவல்களை அடிப்படையாகக் கொண்டே நாம் தாக்குதல் திட்டங்களை வகுக்க முடிகிறது. தாக்குதல்களை வெற்றிகரமாக நடத்த முடிகிறது. வேவுப்பிரிவைச் சேர்ந்த போராளிகளின் துணிகர சாதனைகள் மூலமே நாம் பூநகரிப் பெரும் சமரில் வெற்றியீட்ட முடிந்தது"

இவ்வாறு தலைவர் பிரபாகரன் அவர்கள், போர்முனையில் வீரசாதனைகள் ஈட்டிய போராளிகளுக்கு பரிசு வழங்கிப் பேசும்பொழுது குறிப்பிட்டார். நேற்று முன் தினம் நடைபெற்ற இவ்வைபவத்தில் 17 போராளிகளுக்கு தலைவரால் பரிசில்கள் வழங்கப்பட்டன.

தலைவர் பிரபாகரன் அவர்கள் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது;

"வேவுப்பிரிவைச் சேர்ந்த போராளிகள் மிகவும் நிதானமாக, சாதுரியமாகச் செயற்படவேண்டியுள்ளது. அவர்களது ஒவ்வொரு அசைவும் ஆபத்து நிறைந்தது. மிகவும் துணிவுடன் உயிரைப் பணயம் ... தனையோ போராளிகள் வீரச்சாவைத் தழுவிக்கொள்கிறார்கள். சிலர் தாம் புரிந்த வீரசாதனைகளுக்கு பரிசு பெறுவதற்கு முன்னரே புதிய தாக்குதலுக்கான வேவுப் பணியில் ஈடுபட்டுத் தமது உயிரை ஈகம் செய்துள்ளனர். உன்னதமான இந்த அர்ப்பணிப்புகளின் பயனாகவே விடுதலைப் போரில் நாம் பெரும் வெற்றிகளை ஈட்டிக் கொள்ள முடிகிறது'' என்றார்.

தலைவர் தொடர்ந்து பேசுகையில், கடும் சண்டை நடைபெறும் வேளையில், களத்தில் இறங்கி, எத்தனையோ ஆபத்துக்கள் மத் ... னார். இந்தப்பணியின் போது சிலர் வீரச்சாவு எய்தியதையும்சுட்டிக்காட்டினார்.

இதனைத் தொடர்ந்து பல் வேறு இராணுவ நடவடிக்கையில் வீரசாதனை புரிந்த 17 போராளிகளுக்கும் தலைவர் பரிசுகள் வழங்கினார்.


### தலைவரிடம் பரிசில் பெற்ற போராளிகள்

பல்வேறு இராணுவ நடவடிக்கையில் வீரசாதனை புரிந்து தலைவர் பிரபாகரனிடம் பரிசு பெற்ற 17 போராளிகளின் விபரம் வருமாறு;

- அழகன் (விசு)
- சேரன்
- வெற்றிச்செல்வன் (விக்டர்)
- பூங்குன்றன் (மயூரன்)
- இனியவன் (ரமேஸ்)
- முகிலன்







தேசியத் தலைவர் பிரபாகரன், தாக்குதல் நடவடிக்கையில் வீர சாதனை புரிந்த போராளிகளான பூங்குன்றன் (மயூரன்) க்கு பரிசில் வழங்கி கௌரவிப்பதை முதலாவது படத்திலும், சுதாகரனுக்கு பரிசில் வழங்கி கௌரவிப்பதை இரண்டாவது படத்திலும் வீரப்பன் (தயா) க்கு பரிசில் வழங்கி கௌரவிப்பதை மூன்றாவது படத்திலும் காணலாம்.

தரும் தகவல்களை அடிப்படையாகக் கொண்டே நாம் தாக்குதல் திட்டங்களை வகுக்க முடிகிறது. தாக்குதல்களை வெற்றிகரமாக நடத்த முடிகிறது. வேவுப்பிரிவைச் சேர்ந்த போராளிகளின் துணிகர சாதனைகள் மூலமே நாம் பூநகரிப் பெரும் சமரில் வெற்றியீட்ட முடிந்தது"

இவ்வாறு தலைவர் பிரபாகரன் அவர்கள், போர்முனையில் வீரசாதனைகள் ஈட்டிய போராளிகளுக்கு பரிசு வழங்கிப் பேசும்பொழுது குறிப்பிட்டார். நேற்று முன் தினம் நடைபெற்ற இவ்வைபவத்தில் 17 போராளிகளுக்கு தலைவரால் பரிசில்கள் வழங்கப்பட்டன.

தலைவர் பிரபாகரன் அவர்கள் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது;

"வேவுப்பிரிவைச் சேர்ந்த போராளிகள் மிகவும் நிதானமாக, சாதுரியமாகச் செயற்படவேண்டியுள்ளது. அவர்களது ஒவ்வொரு அசைவும் ஆபத்து நிறைந்தது. மிகவும் துணிவுடன் உயிரைப் பணயம் வைத்து மேற்கொள்ளப்படும் இந்தப் பணியின்போது எத்தனையோ போராளிகள் வீரச்சாவைத் தழுவிக்கொள்கிறார்கள். சிலர் தாம் புரிந்த வீரசாதனைகளுக்கு பரிசு பெறுவதற்கு முன்னரே புதிய தாக்குதலுக்கான வேவுப் பணியில் ஈடுபட்டுத் தமது உயிரை ஈகம் செய்துள்ளனர். உன்னதமான இந்த அர்ப்பணிப்புகளின் பயனாகவே விடுதலைப் போரில் நாம் பெரும் வெற்றிகளை ஈட்டிக் கொள்ள முடிகிறது'' என்றார்.

தலைவர் தொடர்ந்து பேசுகையில், கடும் சண்டை நடைபெறும் வேளையில், களத்தில் இறங்கி, எத்தனையோ ஆபத்துக்கள் மத்தியிலும் வீடியோ, புகைப்படம் எடுத்துள்ள போராளிகளின் துணிவையும் மெச்சினார். இந்தப்பணியின் போது சிலர் வீரச்சாவு எய்தியதையும்சுட்டிக்காட்டினார்.

இதனைத் தொடர்ந்து பல்வேறு இராணுவ நடவடிக்கையில் வீரசாதனை புரிந்த 17 போராளிகளுக்கும் தலைவர் பரிசுகள் வழங்கினார்.

## தலைவரிடம் பரிசில் பெற்ற போராளிகள்

பல்வேறு இராணுவ நடவடிக்கையில் வீரசாதனை புரிந்து தலைவர் பிரபாகரனிடம் பரிசு பெற்ற 17 போராளிகளின் விபரம் வருமாறு;

- அழகன் (விசு)
- சேரன்
- வெற்றிச்செல்வன் (விக்டர்)
- பூங்குன்றன் (மயூரன்)
- இனியவன் (ரமேஸ்)
- முகிலன்
- செம்மனத்தான் (குணாளன்)
- வீரப்பன் (தயா)
- அருளி
- பேரம்பலம் (கீரோ)
- இளங்கோ
- மணிமாறன் (சீலன்)
- திருவருள் (எமர்சன்)
- குமரன்
- மலையப்பன் (ஈசன்)
- சுதாகர் (மூவேந்தன்)
- சுதாகரன்

நெடுமாறனுக்கு பிடியாணை;

## புலிகளுக்கு ஆதரவாக புத்தகம் எழுதினார்

(சென்னை)

விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாக இரு நூல்களை எழுதியமைக்காக தமிழர் தேசிய இயக்கத்தலைவர் பா. நெடுமாறனுக்கு சென்னை நீதிமன்றம் பிடியாணை பிறப்பித்துள்ளது. இவர்எழுதிய நூல்களும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

'காவிய நாயகன் கிட்டு' எனும் தலைப்பில் நெடுமாறன் ஒரு நூல் எழுதினார். இதை அவரின்சகோதரர் ஆறுமுகவேல் வெளியிட்டார். இதேபோல் 'இலங்கை இனப்பிரச்சினையின் அடிப்படை' எனும் தலைப்பில் இன்னுமொரு நூலும் வெளியிடப்பட்டது. இது தொடர்பாக பா. நெடுமாறன் உட்பட நால்வருக்கு சென்னை நீதிமன்றம் முன் ஜாமின் விடுத்துள்ளது.

## இராணுவத் தளபதியாக ஜெரிடிசில்வா நியமனம்

லெப். ஜெனரலாகப் பதவி உயர்வு

(கொழும்பு)

சிறிலங்கா இராணுவத்தின் புதியதளபதியாகமேஜர்ஜெனரல்ஜெரிடி சில்வா (53) நியமிக்கப்பட்டுள்ளார். இவரின் இந் நியமனம் ஜனாதிபதியினால் வழங்கப்பட்டுள்ளது. அடுத்த ஆண்டு ஜனவரி முதலாம் திகதி முதல் இவர் லெப்டினன்ட் ஜெனரலாக பதவி உயர்வு பெறுவதுடன் இராணுவத் தளபதியாக பதவி ஏற்பார்.

19 வயதில் இராணுவத்தில் இணைந்த இவர் பிரிட்டனின் சான்ட்ஹேர்ஸ்ட் ரோயர் இராணுவக் கல்லூரியில் பயிற்சிபெற்று முதலாம் சிங்க றெஜிமன்ட்டில்இணைந்தார். தொடர்ந்து இராணுவ பயிற்சிக் கல்லூரி விரிவுரையாள

(3 ஆம் பக்கம் பார்க்க)

பூநகரி தோல்விக்குப் பொறுப்பேற்று

## ஆயுதப்படை உயர் அதிகாரிகள் அனைவரும் பதவி விலகவேண்டும்!

பௌத்த சங்கம் ஆர்ப்பாட்டம்

பூநகரியில் விடுதலைப் புலிகளிடம் சிறிலங்கா படைகள் தோல்வி கண்டதற்கும் பல நூறு படையினர் பலியானதற்கு பொறுப்பேற்று இராணுவ, கடற்படை உயரதிகாரிகள் அனைவரும் பதவி விலகவேண்டும் என பௌத்த பிக்குகள் சங்கம் ஒன்று ஆர்ப்பாட்டம் செய்துள்ளது.

ருகுணுரட்ட பிக்குகள் முன்னணி என்ற அமைப்பு இந்த படை அதிகாரிகளை அரசு உடனடியாக பதவியிலிருந்து இறக்க வேண்டும் எனக் கோரி ஆர்ப்பாட்டம் நடத்தியதாக தெரிவிக்கப்படுகிறது.

1992-93 ஆண்டு வெட்டுப்புள்ளி விவகாரம்

## பிரதமமந்திரி ரணிலுடன் துணைவேந்தர் பேச்சு;

(யாழ்ப்பாணம்)

பல்கலைக்கழகங்களின் 1992/93 ஆம் கல்வி ஆண்டுக்குரிய வெட்டுப்புள்ளித்திட்டத்தால் மாணவர்களுக்கு ஏற்பட்டிருக்கும் பாதிப்புக்கள் குறித்து யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பிரதமமந்திரியுடன் பேச்சுவார்த்தை நடாத்தியுள்ளார்.

கொழும்பு சென்றிருந்த யாழ் பல்கலைக்கழக துணைவேந்தர் திரு.அ. துரைராஜா மற்றும் மருத்துவபீடாதிபதி திரு. பாலசுப்பிரமணியம்

(3 ஆம் பக்கம் பார்க்க)

## தமிழகத்தில் பிரபாகரனின் புகைப்படம் விற்றவர் கைது

(சென்னை)

காஞ்சிபுரத்தில் வை. கோபாலசாமியின் பொதுக்கூட்ட மேடையருகே விடுதலைப் புலிகளின் தலைவர் வே. பிரபாகரனின் படங்களை விற்பனைசெய்து கொண்டிருந்த இருவர் கைது செய்யப்பட்டனர்.

இதேசமயம் எதிர்வரும் 20ஆம்திகதி தமது தொண்டர்களுக்கு மகிழ்ச்சி தரும் செய்தியை வெளியிடப்போவதாக வை. கோபாலசாமி அறிவித்துள்ளார். சென்னையில் 20ஆம் திகதி நடைபெறவுள்ள ஆதரவாளர்களின் ஆலோசனைக் கூட்டத்தில் அவரின் இம் முடிவு அறிவிக்கப்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

## வரி விளம்பரம்

### தவறிவிட்டது

15 11 93 அன்று கோண்டாவில் சந்தியில் அடையாள அட்டை (6?0950642 V), வாகன அனுமதிப்பத்திரம் அடங்கிய பேர்சு ஒன்று தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து பருந்து பால்மாவிற்பனை நிலையம், ஆஸ்பத்திரி வீதி, யாழ். என்ற முகவரியில் ஒப்படைக்கவும். (6915)

### உடன் விற்பனைக்குண்டு

பிறிமா-லோமன் 5 நாள் பிறவுண் பேட்டுக் குஞ்சுகள் உடன் விற்பனைக்குண்டு. ஓடர்களுக்கு புரோயிலர், சேவல், வெள்ளை பேட்டுக் குஞ்சுகள், கோல்டன்கொமட் குஞ்சுகள் பெற்றுக்கொள்ளலாம். தொடர்பு மல்லிகாபதி சந்தை கிழக்கு ஒழுங்கை, மானிப்பாய் (6913)

### தேவை

தமிழ் ஆங்கிலபுதியபழைய பாவிப்புககு உதவாத தட்டச்சு இயந்திரம் உடன் தேவை, தொடர்பு:- R மருதலிங்கம் 8/1 அம்மன் வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம். (6910)

பஞ்சமிட்டாஸ், ஐஸ்பழவகைகளை துவிச்சக்கரவண்டி, தள்ளுவண்டி மூலம்விற்பனை செய்யக்கூடியவர்கள் உடன் தேவை: வானவில் குளிர்பான நிலையம், ஆரியகுளம் சந்தி யாழ்ப்பாணம். (சி-8139)

### ஒப்படைக்கவும்

கொழும்பில் இருந்து வரும் போது தாண்டிக்குள தடைமுகாமில் வைத்து நல்லையா பிரதர் என்பவரிடம் வி. அமிர்தலிங்கம் ஆகிய நான் கைக்குலட்டர் (கணனி) கொண்டுவந்து தரும்படி கொடுத்தேன் இதை தயவுசெய்து வி. அமிர்தலிங்கம், நவாலி கிழக்கு, மானிப்பாய் விலாசத்தில் ஒப்படைக்கவும். (6909)

### வீடு விற்பனைக்கு

நீர்வேலி. பருத்தித்துறை பிரதான வீதியில் 4 பரப்பு காணியுடன் வீடு விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி: திருமதி வ கார்த்திகேசபிள்ளை 6-வது மைல் கட்டை நீர்வேலி தெற்கு, நீர்வேலி. (6900)

இந்தியா டூபே

---

கந்தர்மடம், பழம்வீதி ஸ்ரீசித்திவிநாயகர் தேவஸ்தானம்

## கணபதி ஹோமம்

காலம்: (19-12-93) ஞாயிறு (நாளை)

தலைமை: நியாயசிரோமணி இ. சுப்ரமண்ய சாஸ்திரிகள்

நிகழ்ச்சிகள்: காலை 6-30 பூஜை, புராணபடனம் 8 மணிமுதல் 9 மணிவரை சிறப்புச் சொற்பொழிவு

நிகழ்த்துபவர்; கலாநிதி ப. கோபாலகிருஷ்ணன்
காலை 9-00 ஹோமம், அபிஷேகம், தீபாராதனை, பஞ்சமுகார்ச்சனை, தொடர்ந்து திருவீதியுலா.

இங்ஙனம்
வை. கருணாகரேஸ்வரகுருக்கள்
(பிரதமகுரு)
ஸ்ரீசித்திவிநாயகர் தேவஸ்தானம்.

(6917)

---

JAFFNA COLLEGE
INSTITUTE OF
TECHNOLOGY
VADDUKODDAI.

## VACANCIES

Applications are invited from suitable qualified candidates for the Following post.

1. **Assistant Lecturer (English)**
   *Qualification* B A Degree with English as one of the main subjects OR Degree in the English medium.
2. **Instructor Grade III (Electrical & Electronics)**
   *Qualification* Passed JCIT OR Possess Craft Certificate of JCIT or equivalent institution with merit pass. OR skilled craftsmen with five (05) years experience in the relevant field And ablity to teach in the English medium.
3. **Steno Typist**
   *Qualification* G. C. E. (O/L) or G. C. E. (A/L) with Pitman final examination in Stenography and Credit Pass in English at G C.E (O/L) with five (05) years experience in stenography Candidate may be tested for Speed.
   Shorthand — 90 w p m
   Typewriting — 45 w. p m

Salary:- Negotiable. depending on qualification & experience.

Apply with full Bio - Data to the
**Director**
**Jaffna College,**
**Institute of Technology**
**Vaddukoddai.**

On or before: **30th December 1993.**

(சி 8151)

---

## 2-ம் ஆண்டு நினைவஞ்சலி

---

## 3ஆம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு:
20-7-1924

மறைவு:
22-12-1990

### அமரர் கதிரவேலு நல்லையா

திதி: **18-12 93**

இவ்வுலகில் எம் வாழ்வை உயரவைத்த குலவிளக்கே
உங்கள் இலட்சியக் கனவை நனவாக்க
நாமும் உங்கள் பாதச்சுவடுகளில் அடியெடுத்து நடப்போம்.

உங்கள் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கும்,

அன்பு மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், உற்றார்,
உறவினர்.

42/3, கோணாவளைலேன்,
கொக்குவில்.

(சி-8154)

---

## 31-ம் நாள் நினைவஞ்சலி



மலர்வு:
1915-05-08

உதிர்வு:
1993-11-18

### பொன்னர் வேலாயுதம்

தந்தைக்கு தந்தையாய், அன்னைக்கு அன்னையாய்
எம்மை வழி நடத்திச் சென்ற ஐயாவே
நீ எம்மை விட்டு பிரிந்து மாதம் ஒன்று ஆனாலும்
உம் நினைவு எம்மை விட்டுமாறாது.

உம் நினைவால் வாடும்,
மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், சகோதரங்கள்

ஆறுகால்மடம்,
யாழ்ப்பாணம்.

(6902)

---

## விண்ணக வாழ்வின் 31-ம் நாள் நினைவலைகள்



அன்னை மடியில்
10.04.1985
ஆண்டவன்
அடியில்
18.11.1993

### செல்வன் நல்லையா
### ∵ இளங்குமரன் ∵
### (கண்ணன்)

பாசம்தனை பொழிந்து நேசம்தனை வளர்த்து
ஆறாத் துயரில் எம்மை மூழ்க வைத்து
மீளாத்துயில் கொண்ட எம் அன்புச் சுடரே
ஆருயிர் தம்பியே - உன்
நற்சாந்திக்காக காலமெல்லாம்
பிரார்த்திப்போமைய்யா

சாந்தி! சாந்தி!!

18-12-93 சனி (இன்று) எமது இல்லத்தில் நடைபெறும் வீட்டுக் கிருத்தியத்தில் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.

சி. நல்லையா
குடும்பத்தினர்

குடமியன்
வரணி.

(6918)

---

## நினைவு கூருகின்றோம்:..

1993-12-18

1984ஆம் ஆண்டு இதே தினத்தில் திருமலை, புல்மோட்டை, சிறிபுரச்சந்தியில் சிறிலங்கா இராணுவத்தினரின் வாகனம் மீதான தாக்குதலில் வீரச்சாவெய்திய,

**லெப். ஐங்கரன்** (சுப்பிரமணியம் நற்குணம் - திரியாய்-திருமலை)

**லெப். கடாபி** (வேலுப்பிள்ளை கிருஷ்ணானந்தன்- இருபாலை, புதுக்குடியிருப்பு, (முல்லைத்தீவு)

மன்னார் - பரப்புக்கடந்தான் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தின் முற்றுகையில் விழுப்புண் அடைந்த நிலையில் தன்னைத்தானே சுட்டு வீரச்சாவெய்திய,

**லெப். நிதி** (கிறிஸ்துநாதன் சுதாகர் - பனங்கட்டிக்கொட்டு - மன்னார்)

1986ஆம் ஆண்டு மட்டு - தாண்டியடிப் பகுதியில் சிறிலங்கா அதிரடிப் படையினர் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் வீரச்சாவெய்திய,

**லெப். கமலன்** (சிவசுந்தரம் இராசநாயகம்-கல்முனை - 02- அம்பாறை)

இதேபகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய,

கொழும்பில் இருந்து வரும் போது தாண்டிக்குள தடை முகாமில் வைத்து நல்லையா பிறதர் என்பவரிடம் வி. அமிர் தலிங்கம் ஆகிய நான் கைக்கு லட்டர் (கணனி) கொண்டு வந்து தரும்படி கொடுத்தேன் இதை தயவுசெய்து வி. அமிர் தலிங்கம், நவாலி கிழக்கு, மானிப்பாய் விலாசத்தில் ஒப்படைக்கவும். (6909)

## வீடு விற்பனைக்கு

நீர்வேலி. பருத்தித்துறை பிரதான வீதியில் 4 பரப்பு காணியுடன் வீடு விற்பனைக் குண்டு. தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி: திருமதி வ கார்த்திகேசபிள்ளை 6-வது மைல் கட்டை நீர் வேலி தெற்கு, நீர்வேலி. (6900)

## இந்தியா டுடே

இலங்கை ஏஜண்டான P S சுந்தரம் அன சன்ஸ் அவர்களால் தமிழீழத்தில் ஏஜண்டாக எம்மை நியமித் துள்ளார்கள். வாடிக்கை யாளரின் நன்மை கருதிவிலை குறைத்துள்ளோம். மக்மிலன் ஸ்ரீகாந் புத்தகசாலைகள், யாழ்ப்பாணம். (சி-8111)

## துளிர்

தமிழ்நாடு, புதுவை அறிவி யல் இயக்கம் இணைந்து வெளியிடும் சிறுவர் அறிவியல் இதழ். கிடைக்கும் இடம் வசந்தம் புத்தக நிலையம் 405, அருச்சுனா வீதி, யாழ்ப் பாணம். (6861)

## விற்பனைக்கு

பொம்மேரியன் இரண்டு மாதம் குட்டிகள் விற்பனை க்கு உண்டு ஆர். எஸ் கே. பாம் முருகபதி. உடுவில், சன்னாகம் R,S K FARM Murugapathy, Uduvil Chunnakam. (6898)

## கலண்டர், டயறி வகைகள்

லீலா கலண்டர், சகலவித மான டயறி வகைகள், கிறிஸ் மஸ் காட், அன்பளிப்பு அடிப் பதற்குரிய கலண்டர் மொத் தமாகவும், சில்லறையாகவும் மக்மிலன், ஸ்ரீகாந் புத்தக சாலைகள் யாழ்ப்பாணம். (சி-8112)

## கருத்தரங்கு

''முழு மனித விடுதலை'' நாளை (ஞாயிறு) காலை 9-30. பேச்சாளர்: பேராசிரி யர் சிவத்தம்பி, ஜேம்ஸ் பத்தி நாதர். நற்சமூக நடுநிலையம், 115 4-ம் குறுக்குத்தெரு யாழ்ப்பாணம் அனைவரும் வருக. (69 19)

with merit pass. OR skilled craftsmen with. five (05) years experience in the relevant field And ablity to teach in the English medium.

**3. Steno Typist**

*Qualification* G. C. E. (O/L) or G. C. E. (A/L) with Pitman final examination in Stenography and Credit Pass in English at G C.E (O/L) with five (05) years experience in stenography Candidate may be tested for Speed.

Shorthand — 90 w p m
Typewriting — 45 w. p m

Salary:- Negotiable. depending on qualification & experience.

Apply with full Bio - Data to the

**Director**
**Jaffna College,**
**Institute of Technology**
**Vaddukoddai.**

*On or before:* **30th December 1993.**

(சி 8151)

# 2-ம் ஆண்டு நினைவஞ்சலி



## அமரர் இராசையா கந்தசாமி

(கீதா ஜுவல் கவுஸ்)

**மண்ணில் 1949-05-13** **விண்ணில் 1992-01-10**

**திதி: 1993-12-19**

பாசமிகு தந்தையே பண்புமிகு தெய்வமே
பக்தியின் சிகரமே எம்மை மீளாத்துயரில்
ஆழ்த்தி விண் சென்று விண்ணில் இருந்து
எமைக் காக்கும் தெய்வமே ஆண்டுகள் இரண்டு
என்ன ஈராயிரம் ஆண்டுகள் சென்றாலும்
உமை என்றும் மறவாத பாசமிகு-

மீனாட்சி அம்மன் வீதி, சங்கத்தானை, சாவகச்சேரி.

**பிள்ளைகள், மனைவி.**

(6886)

1915-05-08

உதிர்வு:

1993-11-18



## பொன்னர் வேலாயுதம்

தந்தைக்கு தந்தையாய், அன்னைக்கு அன்னையாய்
எம்மை வழி நடத்திச் சென்ற ஐயாவே
நீ எம்மை விட்டு பிரிந்து மாதம் ஒன்று ஆனாலும்
உம் நினைவு எம்மை விட்டுமாறாது.

உம் நினைவால் வாடும்,
மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், சகோதரங்கள்

ஆறுகால்மடம், யாழ்ப்பாணம்.

(6902)

# 1-ம் ஆண்டு நினைவஞ்சலி



## அமரர் சி. வடிவேலு

(வர்த்தகர் வவுனியா)

**தோற்றம் 15 12.1923** **மறைவு 18.12.1992**

**திதி: 06.01.1994**

அன்பின் உருவமாய் பண்பின் சிகரமாய்
பாசத்தின் உறைவிடமாய் இருந்து
எமக்கு நல்வழி காட்டிய அப்பாவே!
கனவாகநீங்கள்மறைந்து ஆண்டொன்றுஆனாலும்
உங்கள் நினைவுகள் என்றும் எம் நெஞ்சை
விட்டு அகலா!

உங்கள ஆத்ம சாந்திக்கு இறைவன்
கருணையை வேண்டுகிறோம்,

சுழிபுரம் வடக்கு, சுழிபுரம்.

மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

(6883)

1993-12-18

1984ஆம் ஆண்டு இதே தினத்தில் திருமலை, புல்மோட்டை, சிறிபுரச்சந்தியில் சிறிலங்கா இரா ணுவத்தினரின் வாகனம் மீதான தாக்குதலில் வீரச் சாவெய்திய,

**லெப். ஐங்கரன்** (சுப்பிரமணியம் நற்குணம் - திரியாய்-திருமலை)

**லெப். கடாபி** (வேலுப்பிள்ளை கிருஷ்ணானந்தன்- இருபாலை, புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு)

மன்னார் - பரப்புக்கடந்தான் பகுதியில் சிறில ங்கா இராணுவத்தின் முற்றுகையில் விழுப்புண் அடை ந்த நிலையில் தன்னைத்தானே சுட்டு வீரச்சா வெய்திய,

**லெப். நிதி** (கிறிஸ்துநாதன் சுதாகர் - பனங்கட் டிக்கொட்டு - மன்னார்)

1986ஆம் ஆண்டு மட்டு - தாண்டியடிப் பகுதி யில் சிறிலங்கா அதிரடிப் படையினர் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் வீரச்சாவெய்திய,

**லெப். கமலன்** (சிவசுந்தரம் இராசநாயகம்-கல் முனை - 02- அம்பாறை)

இதேபகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருட னான சமரில் வீரச்சாவெய்திய,

**ரவிக்குமார்** (மயில்வாகனம் புண்ணியமூர்த்தி-தம் பிலுவில் -01- அம்பாறை)

1987 ஆம் ஆண்டு கட்டுவன் பகுதியில் இந்தியப் படையினர் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் வீரச் சாவெய்திய,

**பன்னீர்** (நாகலிங்கம் பன்னீர்ச்செல்வன்-ஏழாலை தெற்கு, சுன்னாகம் - யாழ்)

மந்துவில் பகுதியில் எமது முகாமை இந்தியப் படையினர் சுற்றி வளைத்தபோது வீரச்சாவெய்திய,

**கணேஸ் ( - - )**

கோண்டாவில் - காரைக்கால் பகுதியில் இந்தியப் படையினர் சுற்றிவளைத்தபோது வீரச்சாவெய்திய,

**தனுஸ்** (வைத்திலிங்கம் வசீகரன் - நீலாவத்தை- தெல்லிப்பழை - யாழ்)

ஆனைக்கோட்டை, கூழாவடிப் பகுதியில் இந் தியப் படையினர் மேற்கொண்ட முற்றுகையின்போது வீரச்சாவெய்திய,

**ஜெராட்** (— — கண்டி)

**ரவி** (பிரகாஸ் ரவிக்குமார் - கச்சேரி - நல்லூர் வீதி, சுண்டிக்குளி - யாழ்)

1990 ஆம் ஆண்டு மட்டு, பட்டிருப்புப் பகுதி யில் எதிர்பாராதவிதமாக ஏற்பட்ட பொறி வெடி விபத்தில் எமைப்பிரிந்த,

**2-ம் லெப். வால்டர்** (கந்தசாமி சிவப்பிரகாசம்- குருக்கள்மடம் - மட்டு)

திருமலைநகர், சமாதிப்பிள்ளையார் கோவில டிப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினரால் வெட் டிக் கொல்லப்பட்டு, ரயர் போட்டு எரிக்கப்பட்ட குழந்தைகள், பெண்கள் உட்பட 5 தமிழர்கள்.

1991ஆம் ஆண்டு வவுனியா - பேயாடி, கூழாங் குளம் பகுதியிலிருந்து வெளியேறிய சிறிலங்கா இரா ணுவத்தினர் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலின் போது வீரச்சாவெய்திய,

**2-ம் லெப். தம்பித்துரை** (சின்னத்துரை நற்குணராசா - கூழாங்குளம்- வவுனியா)

**குஞ்சன்** (சின்னராசா அருந்தவராசா-கூழாங்குளம் - வவுனியா)

1992ஆம் ஆண்டு தொண்டமானாறு - அச்சுவே லிப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான நேரடிச்சமரின் போது சாவெய்திய,

போராட்டப் பங்காளரான,

**சின்னத்தம்பி** (சர்வானந்தம் பவானந்தராசா- வளலாய்-அச்சுவேலி)

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்.

**தமிழீழ விடுதலைப் புலிகள்.**

(சி-8153)

மாநகராட்சி மன்றம்
யாழ்ப்பாணம்

### சிந்தனைக்கு

ஊக்கத்தோடு இருப்பவன் சாதனங்களைக் காண்பான். காண முடியாவிடில், அவற்றை உருவாக்குவான்.

- வில்லியம் சேளிங் -

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 18-12-1993
தொலைபேசி
ஆசிரியபீடம் 025 - 2839 நிர்வாக பீடம் 2023
த. பெ. எண் - 05

# அதிகாரிகளின் பொறுப்பற்ற செயல்

யாழ். குடாநாட்டில் மலேரியா தீவிரமாகப் பெருகி வருகின்றது. வைத்தியசாலைகளில் நாளாந்தம் 'மலேரியா' நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துச் செல்கின்றமையே இதற்குப் போதிய சான்றாகும்.

மழை காலத்தில் நுளம்பின் பெருக்கம் அதிகம் என்பதும், இதன் காரணமாக மலேரியா நோய் தீவிரமாக பரவுவதற்கு வாய்ப்புக்கள் அதிகம் என்பதும் சாதாரண அறிவு படைத்த எவருக்கும் சொல்லித்தான் தெரிய வேண்டும் என்பதல்ல.

மேலும், இன்று நிலவும் யுத்தச் சூழ்நிலை காரணமாக பெருமளவு மக்கள் இடம்பெயர்ந்து அகதிமுகாம்களில் வசித்து வருகின்றார்கள். இங்கு பொதுவாகவே உருவாகக்கூடிய சுகாதாரச் சீர்கேடுகள் மழைகாலத்தில் மேலும் அதிகரிக்கும் என்பதும் எதிர்பார்க்கக்கூடியதுதான்.

அத்தோடு, குண்டுவீச்சு, எறிகணைத் தாக்குதல்கள் என்பனவற்றினால் பெருமளவில் சேதமடைந்துள்ள கட்டடங்கள் துப்பரவு செய்யப்படாத நிலையிலேயே உள்ளன. இதன் காரணமாக அப்பகுதியில் தேங்கி நிற்கும் நீரினாலும், பெருமளவு நுளம்புகள் உற்பத்தியாவது தவிர்க்க முடியாததாகும்.

இந் நிலையில், எதிர்பார்க்கப்பட்ட ஒன்றை கட்டுப்படுத்த முயற்சிகள் மேற்கொள்ளப்படவில்லை என்பது அதற்குப் பொறுப்பான அதிகாரிகளின் அசட்டையையும், பொறுப்பின்மையையுமே காட்டும் ஒரு அம்சம் என்பதில் தவறில்லை.

சிறிலங்கா பேரினவாத அரசு கடந்த மூன்றரை வருடங்களுக்கு மேலாக, இறுக்கமான பொருளாதாரத் தடையை தமிழ்ப் பிரதேசத்தின் மீது அமுல்படுத்தி வருகின்றது. இதில் அத்தியாவசியப் பொருள்கள் உட்பட சில மருந்துப் பொருட்கள் வரை அடங்குகின்றன இதனால் மக்கள் பெரும் சொல்லொணா ...

# தமிழர் உரிமை மறுக்கப்பட்டதால் இளைஞர்கள் ஆயுதம் ஏந்தினர்!

## எதிர்க்கட்சித் தலைவி சிறிமாவோ தெரிவிப்பு

(கொழும்பு)

தமிழ் மக்களின் உரிமைகள் மறுக்கப்பட்டதனால்தான் தமிழ் இளைஞர்கள் ஆயுதம் ஏந்திப் போராட ஆரம்பித்தனர். இதனாலேயே யுத்தம் ஆரம்பித்தது, என சுதந்திரக் கட்சி தலைவியும், எதிர்க்கட்சித் தலைவியுமான சிறிமாவோ பண்டாரநாயக்கா நேற்று முன்தினம் நுகேகொடையில் நடைபெற்ற எதிரணியினரின் பொதுக்கூட்டத்தில் தலைமை வகித்து பேசுகையில் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் ''இந்த அரசு யுத்தத்தை நிறுத்த விரும்பவில்லை யுத்தத்திற்கு ஆயுதங்களை கொள்வனவு செய்வதன் மூலம் சிலர் பெருமளவு பணத்தை கமிஷனாக பெறுகின்றனர். கொள்வனவு செய்யப்படும் ஆயுதங்களோ புலிகளிடம் போய் சேருகின்றன. பூநகரி தாக்குதலில் நடந்தது தெரிந்ததுதானே''

பொதுமக்களிடமிருந்து படையினருக்கு பொருள்கள் சேகரிக்கப்படுகின்றன. ஜனாதிபதி, பிரதமர் ஆகிய இருவரும் பயணம் செய்ய 200 லட்சம் ரூபா செலவில் குண்டு துளைக்காத இரு பென்ஸ்கார்கள் இறக்குமதி செய்யப்பட்டுள்ளன. அவர்கள் தற்போது தரை மார்க்கமாக பயணம் செய்வதில்லை ஆகாய மார்க்கமாகவே பயணம்செய்கின்றனர். இதனால் காயமடைந்த படையினரைகூட வைத்தியசாலைக்கு கொண்டு செல்ல முடியாதுள்ளது என சிறிமாவோ பண்டாரநாயக்கா மேலும் தெரிவித்தார்.

# படையினர் பலர் பலியாகும் யுத்தம் அவசியம் தானா?

## டியூ குணசேகரா கேள்வி

கடந்த பத்து ஆண்டுகாலப் போரில் 336 படை அதிகாரிகள், 9718 படையினர் கொல்லப்பட்டுள்ளனர். 5000 படையினர் காணாமல் போயுள்ளனர் எனவும் பாதுகாப்பு அமைச்சினால் கூறப்படுகிறது இவ்வளவு இழப்பின் மத்தியிலும் யுத்தத்தை நடத்தத்தான் வேண்டுமா? என கம்யூனிஸ்ட் கட்சி உபதலைவர் டியூ குணசேகர கேள்வி எழுப்பினார் நேற்று முன்தினம் நடைபெற்ற எதிரணிகள் கூட்டத்தில் அவர் பேசும்போது இவ்வாறு குறிப்பிட்டார்.

கடந்த பத்து ஆண்டுகளில் ஏழு இராணுவத் தளபதிகள் பதவி வகித்துள்ளனர். ஐந்து பாதுகாப்பு அமைச்சின் செயலாளர்கள் பதவி வகித்துள்ளனர். மூன்று பாதுகாப்பு அமைச்சர்கள் கொல்லப்பட்டுள்ளனர். ஆனால் யுத்தம் தொடர்கிறது என மேலும் அவர் தெரிவித்தார்.

# முடிவின்றி தொடரும் யுத்தத்திற்கு அரசியல் ரீதியான தீர்வு தேவை

## ஜேர்மன் வெளியுறவு இராஜாங்க அமைச்சர் தெரிவிப்பு

(கொழும்பு)

வடக்குகிழக்கில் முடிவின்றி தொடரும் யுத்தத்திற்கு விரைவில் அரசியல் ரீதியான தீர்வு காணப்படல் வேண்டும் என கொழும்பு வந்துள்ள ஜேர்மனியின் வெளியுறவு இராஜாங்க அமைச்சர் ஹெல்மட்ஷெபர் தெரிவித்துள்ளார் இலங்கைக்கும் ஜேர்மனிக்கும் இடையே ராஜதந்திர உறவு ஆரம்பிக்கப்பட்ட நாற்பது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடைபெற்ற வைபவம் ஒன்றில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

கொழும்பு வந்த ஜேர்மனியின் வெளியுறவு இராஜாங்க அமைச்சர் ஜனாதிபதி டி. பி விஜேதுங்க, எதிர்க்கட்சித் தலைவி சிறிமாவோ பண்டாரநாயக்கா ஆகியோரையும் சந்தித்துப் பேசினார். பேச்சுகளின்போது வடக்கு, கிழக்கு பிரச்சினை ஒரு பயங்கரவாதப் பிரச்சினை என்பதை அரசதரப்பு வலியுறுத்தியதாகவும் எனினும் இதன் பின்னர் நடந்த வைபவத்தில் உரையாற்றிய ஜேர்மன் அமைச்சர் இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வே காணவேண்டும் என வலியுறுத்திப் பேசியதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணப்பட வேண்டுமானால் மக்களின் ஒவ்வொரு பிரிவினரதும் நலன்கள் கவனத்தில் கொள்ளப்பட வேண்டும். பிரச்சினை மீண்டும் தோன்றாதவாறு தீர்வு காணப்படல் வேண்டும் எனவும் அவர் அப்போது வலியுறுத்தினார்.

ஜேர்மனியில் தமிழ் அகதிகள் அந்நாட்டிற்கு ஒரு சுமையாக இல்லை எனவும் அவர்களில் பெரும்பாலானவர்கள் அங்கு ஏதோ ஒரு வகையான தொழில் முயற்சியில் ஈடுபட்டுள்ளனர் எனவும் ஜேர்மனி வெளியுறவு இராஜாங்க அமைச்சர் ஹெல்மட் ஷெபர் மேலும் தெரிவித்தார்.

# இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண இராணுவத்தினால் முடியாது!

# இனப்போரை சித்திரிக்கும் சிங்களத் திரைப்படம்

சிறிலங்கா அரசுக்கும் தமிழர்களுக்கும் இடையில் கடந்த பல ஆண்டுகளாக நடைபெற்றுவரும் இனப்போரை கருவாகக்கொண்டு சிங்களத் திரைப்படம் ஒன்று தயாரிக்கப்பட்டுள்ளது. ''சிரஞ்சீவிகள்'' என்ற பெயரில் இப்படம் தயாரிக்கப்பட்டுள்ளது. இது கொழும்பில் திரையிடப்பட அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

# செயலக கட்டடத்தை திருத்த 8 லட்சம் ரூபா பொருள்கள்

விமான தாக்குதலால்சேதமடைந்த யாழ். செயலக கட்டடத்தை திருத்துவதற்கு முதல் கட்டமாக 8 இலட்ச ரூபா பெறுமதியான சீமெந்து மற்றும் அஸ்பெற்ரஸ் சீற் போன்ற பொருள்கள் ருகுணு கப்பல் மூலம் எடுத்துவரப்பட உள்ளதாக கொழும்பிலிருந்து திரும்பிய யாழ் அரசாங்க அதிபர் தெரிவித்துள்ளார்

இப்பொருள்களை யாழ்ப்பாணத்திற்கு எடுத்துச் செல்லுவதற்கு அனுமதி வழங்க முதலில் பாதுகாப்பு அமைச்சு மறுத்துவிட்டபோதும் பின்னர் நடாத்தப்பட்ட பேச்சுவார்த்தைகள் மூலமே அவை பெறப்பட்டதாக மேலும் அவர் தெரிவித்தார்

மேற்படி பொருள்கள் வந்ததும் செயலக கட்டட திருத்த வேலைகள் ஆரம்பிக்கப்படுமெனவும் அநேகமாக ஜனவரி மாத இறுதிக்குள் எப்படியும் கட்டட திருத்த வேலை பூர்த்தியாகிவிடுமெனவும் அவர் தெரிவித்தார். (சி) (க)

## வெட்டுப்புள்ளி திட்டத்தில்

# பாதிக்கப்பட்டோர் சார்பாக வழக்குத் தொடர முயற்சி!

(யாழ்ப்பாணம்)

பல்கலைக் கழகங்களுக்கான1992, 93 கல்வி ஆண்டுக்குரிய வெட்டுப்புள்ளித் திட்டத்தால் பாதிக்கப்பட்ட மணவர்கள் சார்பாக வழக்குத்தாக்கல் செய்வது தொடர்பாக ஆலோசிக்கப்பட்டு வருகிறது.

இக்கல்வி ஆண்டுக்கு அனுமதி கோரும் மாணவர்கள் தோற்றிய க. பொ. த. உயர்தரப் பரீட்சையின் வினாத்தாள்கள் ஒப்பீட்டளவில் கடினமானவை என்ற காரணத்தைக் கூறி வழக்குத்தாக்கல் செய்வது குறித்தே தற்பொழுது ஆலோசிக்கப்பட்டு வருகிறது. விசேட பரீட்சையின் வினாத்தாளுடன் ஒப்பிடும் போது சாதாரண பரீட்சைக்கான வினாத்தாள்கள் இலகுவானது என்று கூறி நீதிமன்றில் சாட்சியம் கூறுவதற்கு மேற்படி பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்கள் தயாராக இருந்தால் இவ்வாறானதொரு வழக்கைத்தாக்கல் செய்ய முடியும் என்று தெரியவருகிறது.

இவ்வழக்கு தாக்கல் செய்வது குறித்த சாத்தியப்பாடுகள் குறித்தும் சட்டநுணுக்கங்கள் குறித்தும் சட்ட அறிஞர்களுடன் ஆலோசனை செய்யப்பட இருக்கிறது.

அதேவேளை 1991, 92 கல்வி ஆண்டுக்கான வெட்டுப்புள்ளித் திட்டத்தால் பாதிக்கப்பட்ட மாணவர்களும் தமது பாதிப்புக்குறித்து மற்றுமொரு வழக்கைத் தாக்கல் செய்வது குறித்தும் ஆலோசித்து வருகின்றனர் (க)(நி)

# உயர்கல்வி அமைச்சராக அநுரா பதவிஏற்றார்

உயர்கல்வி அமைச்சராக திரு அநுரா பண்டாரநாயக்கா நேற்று ஜனாதிபதி செயலகத்தில் ஜனாதிபதி திரு. டி பி. விஜேதுங்க முன்னிலையில் சத்தியபிரமாணம் செய்துகொண்டார்.

இவருடன் பாராளுமன்ற உறுப்பினர் ...

செய்யப்பட்டதை தொடர்ந்து அமைச்சர்கள், கருத்திட்ட அமைச்சர்கள், ராஜாங்க அமைச்சர்கள் பலரும் நேற்றையதினம் ஜனாதிபதி செயலகத்தில் சத்தியப்பிரமாணம் செய்து பதவிகளை ஏற்றுள்ளனர்.

உருவாகக்கூடிய சுகாதாரச் சீர்கேடுகள் மழைகாலத்தில் மேலும் அதிகரிக்கும் என்பதும் எதிர்பார்க்கக்கூடியதுதான்.

அத்தோடு, குண்டுவீச்சு, எறிகணைத் தாக்குதல்கள் என்பனவற்றினால் பெருமளவில் சேதமடைந்துள்ள கட்டடங்கள் துப்பரவு செய்யப்படாத நிலையிலேயே உள்ளன. இதன் காரணமாக அப்பகுதியில் தேங்கி நிற்கும் நீரினாலும், பெருமளவு நுளம்புகள் உற்பத்தியாவது தவிர்க்க முடியாததாகும்.

இந் நிலையில், எதிர்பார்க்கப்பட்ட ஒன்றை கட்டுப்படுத்த முயற்சிகள் மேற்கொள்ளப்படவில்லை என்பது அதற்குப் பொறுப்பான அதிகாரிகளின் அசட்டையையும், பொறுப்பின்மையையுமே காட்டும் ஒரு அம்சம் என்பதில் தவறில்லை.

சிறிலங்கா பேரினவாத அரசு கடந்த மூன்றரை வருடங்களுக்கு மேலாக, இறுக்கமான பொருளாதாரத் தடையை தமிழ்ப் பிரதேசத்தின் மீது அமுல்படுத்தி வருகின்றது. இதில் அத்தியாவசியப் பொருள்கள் உட்பட சில மருந்துப் பொருட்கள் வரை அடங்குகின்றன இதனால் மக்கள் பெரும் சொல்லொண்ணா துன்பங்களையும் அனுபவித்து வருகின்றனர்.

ஆனால், மலேரியாதடுப்பதற்குப் பயன்படும் 'மலத்தியோன்' கிருமிநாசினிக்கு சிறிலங்கா அரசு தடை விதிக்கவில்லை. ஒரு விடயத்தில் மட்டுமே கட்டுப்பாடு விதித்துள்ளது. அதாவது, வெற்றுக் கொள்கலன்களை வடக்கில் இருந்து கொண்டு சென்று கொள்வனவு செய்ய முடியாது என்பதே அதுவாகும்.

இதேவேளை, முன்னர் கொண்டு வரப்பட்ட மலத்தியோன் வெற்றுக் கொள்கலன்கள் ஏலத்தில் விற்கப்பட்டும் இருந்தன. இதன் மூலம் தேவையான பணமும் பெறப்பட்டும் இருந்தது. இந்நிலையிலும், மலத்தியோன் கொள்வனவு செய்வதற்கு இது தொடர்பான அதிகாரிகள் அக்கறை காட்டாதது ஏன்?

ஆனால், இம் மலத்தியோன் கொண்டு வரப்படாமைக்கு அதிகாரிகள் மட்டத்தில் தெரிவிக்கப்படும் காரணங்கள் மிகவும் அற்பத்தனமானவையாக இருக்கின்றன. அத்தோடு, அவர்களின் நடவடிக்கைகள் குறித்து கேள்விகளையும் எழுப்புகின்றன.

சுமார் ஆறு மாதத்திற்கு முன்னர் விற்பனவு செய்யப்பட்ட வெற்றுக் கலன்களுக்குரிய பணத்தை அதற்குப் பொறுப்பான அதிகாரி, கொள்வனவு அதிகாரியிடம் ஒப்படைப்பதற்கு நான்கு மாதங்களுக்கு மேல் எடுத்ததென்பது அவரின் நடவடிக்கைகள் குறித்துபல சந்தேகங்களை எழுப்புகின்றன. அதாவது, மாரிகாலத்திற்கு மலத்தியோன் தேவையில்லை என்று அவர் கருதினாரா? அல்லது, மலேரியா வந்தால் வந்துவிட்டுப் போகட்டும் என்று நினைத்து வாழாதுஇருந்து விட்டாரா?

மேலும், பணத்தை காலம் தாழ்த்தி வழங்கிய அதிகாரி, மலத்தியோனை கொள்வனவு செய்ய கொழும்பு செல்வதற்கான ஏற்பாடுகளையும் செய்து கொடுக்கவில்லை எனவும் அறியமுடிகின்றது. இதனை பார்க்கும் போது எவ்வாறாலும் மலத்தியோன் வருவதை அதிகாரி தடுத்து விட வேண்டும் எனக் கங்கணம் கட்டிக் கொண்டிருந்ததாகவே கருத இடமுண்டு.

அதிகாரிகளின் இந் நடவடிக்கைகள் மற்றைய அதிகாரியுடன் உள்ள போட்டி பூசல் காரணமாக நிகழ்ந்திருக்கலாம். ஆனால், அவர்களின் போட்டி பூசல்கள் ஒட்டுமொத்தமாக முழுச்சமுதாயத்தையுமே பாதிப்பவையாக இருந்து விடக் கூடாது. அவ்வாறு, பாதிக்கப்படும் அளவிற்கு நிலைமை செல்லுமாயின் இதற்கு அதிகாரிகளே பொறுப்பு ஏற்கவேண்டும் என்பதோடு பதில் சொல்லியும் ஆகவேண்டும்.

---

(கொழும்பு)

வடக்குகிழக்கில் முடிவின்றி தொடரும் யுத்தத்திற்கு விரைவில் அரசியல் ரீதியான தீர்வு காணப்படல் வேண்டும் என கொழும்பு வந்துள்ள ஜேர்மனியின் வெளியுறவு இராஜாங்க அமைச்சர் ஹெல்மட்ஷெபர் தெரிவித்துள்ளார் இலங்கைக்கும் ஜேர்மனிக்கும் இடையே ராஜதந்திர உறவு ஆரம்பிக்கப்பட்ட நாற்பது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடைபெற்ற வைபவம் ஒன்றில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

கொழும்பு வந்த ஜேர்மனியின் வெளியுறவு இராஜாங்க அமைச்சர் ஜனாதிபதி டி.பி. விஜேதுங்க, எதிர்க்கட்சித் தலைவி சிறிமாவோ பண்டாரநாயக்கா ஆகியோரையும் சந்தித்துப் பேசினார். பேச்சுகளின்போது வடக்கு, கிழக்கு பிரச்சினை ஒரு பயங்கரவாதப் பிரச்சினை என்பதை அரசதரப்பு வலியுறுத்தியதாகவும் எனினும் இதன் பின்னர் நடந்த வைபவத்தில் உரையாற்றிய ஜேர்மன் அமைச்சர் இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வே காணவேண்டும் என வலியுறுத்திப் பேசியதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இப்பிரச்சினைக்கு அரசியல் ரீதியான தீர்வு காணப்படுகையில் தமிழ் மக்களின் ஒவ்வொரு பிரிவினரதும் நலன்கள் கவனத்தில் கொள்ளப்பட வேண்டும். பிரச்சினை மீண்டும் தோன்றாதவாறு தீர்வு காணப்படல் வேண்டும் எனவும் அவர் அப்போது வலியுறுத்தினார்.

ஜேர்மனியில் தமிழ் அகதிகள் அந்நாட்டிற்கு ஒரு சுமையாக இல்லை எனவும் அவர்களில் பெரும்பாலானவர்கள் அங்கு ஏதோ ஒரு வகையான தொழில் முயற்சியில் ஈடுபட்டுள்ளனர் எனவும் ஜேர்மனி வெளியுறவு இராஜாங்க அமைச்சர் ஹெல்மட் ஷெபர் மேலும் தெரிவித்தார்.

# இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண இராணுவத்தினால் முடியாது!

## இராணுவ அதிகாரி ஒப்புக்கொள்கிறார்

இனப்பிரச்சினையைத் தீர்ப்பது குறித்து அரசியல்வாதிகளிடம் எந்த ஒரு திட்டமும் இல்லை. அதேவேளை இராணுவத்தால் இப்பிரச்சினைக்கு தீர்வு காண முடியாது. ஆனால் 'சிறிய குழுவொன்று' இராணுவத்தை தாக்குவதைச் சகிக்கமுடியாமலேயே இராணுவ நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டியுள்ளது என சிறிலங்காவின் இராணுவ அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்; விமானப்படையினர் இலக்கின் மீதுதான் தாக்குதல் நடத்துகின்றனர். இலக்குத் தவறி அவர்கள் தாக்குதல் நடாத்தியதில்லை. ஆயுதங்களுடன் வாகனங்கள் செல்லும்போது அவற்றின் மீது தாக்குதல் நடாத்தும்போதே அவை அருகிலுள்ள கட்டடங்கள் மேல் விழுகின்றன என்றார்.

பிரச்சினைக்கு இராணுவத் தீர்வு காணமுடியாது என்பது அரசாங்கத்திற்கு நன்கு புரியும் ஆனால் அதனைத் தீர்க்க அவர்களிடம் திட்டம் எதுவும் இல்லை என அவ் அதிகாரி குறிப்பிட்டார்.

# சிறிலங்காவிற்கு கைக்குண்டுகள் அவுஸ். விற்பனை செய்ய மறுப்பு;

சிறிலங்கா அரசாங்கத்திற்கு கைக்குண்டுகளை விற்பனைசெய்யஅவுஸ்திரேலியா மறுத்து விட்டதாக தூதரக வட்டாரங்களிலிருந்து தெரியவந்துள்ளது.

மேற்கொள்ளப்படவுள்ள இராணுவ நடவடிக்கைகளுக்கு ஆயுதங்களை கொள்வனவு செய்யும் முயற்சிகளில் இறங்கியுள்ள சிறிலங்கா அரசாங்கம் கைக் குண்டுகளைக் கொள்வனவு செய்ய அவுஸ்திரேலியாவை அணுகிய போதே இவ்வாறு மறுக்கப்பட்டதாக தெரியவருகிறது. எனினும் இதற்கான காரணம் தெரியவரவில்லை.

சீனா, பிரிட்டன், பிரான்ஸ், தென்னாபிரிக்கா, செக், சிலோவாக்கியா, இஸ்ரேல், தென்கொரியா ஆகிய நாடுகளிலிருந்து ஏற்கனவே ஆயுதங்களையும் இராணுவ தளபாடங்களையும் கொள்வனவு செய்யப்பட்டுள்ளதாக என மேலும் தெரியவருகிறது.

## வடக்கு - கிழக்கு பல்கலைக் கழக அனுமதி

# மாணவர் தொகை குறைப்பு குறித்து உயர்கல்வி அமைச்சருடன் பேச்சு

யாழ்ப்பாணம், மட்டக்களப்பு பல்கலைக்கழகங்களுக்கு மாணவர் அனுமதியை குறைத்துள்ளமை, மானியங்கள் குறைப்பு போன்ற விடயங்களை உயர்கல்வி அமைச்சருடன் பேச்சு நடத்தி சுமுகமான தீர்வொன்றை காண்பதுஎனஅமைச்சரவைஉபகுழு கூட்டத்தில் இம் முடிவு எடுக்கப்பட்டது

யாழ், மட்டக்களப்பு பல்கலைக்கழகங்களுக்கு இம்முறை குறைந்தளவான மாணவர்களே அனுமதிக்கப்பட்டுள்ளனர். இந்த அனுமதி குறைப்பு மூலம் மானியங்களும் வெட்டப்பட்டுள்ளன என இந்த உபகுழு கூட்டத்தில் கலந்து கொண்ட தமிழ்ப் பிரதிநிதிகள் சுட்டிக் காட்டினர். அங்கு சமுகமளித்திருந்த பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவின் பிரதிநிதி மாணவர் அனுமதி குறைப்பிற்கானகாரணத்தை விளக்கினார். எனினும் இதனை தமிழ்ப்பிரதிநிதிகள் ஏற்கவில்லை

இதனால் இவ் விவகாரம் தொடர்பாக உயர்கல்வி அமைச்சரை அடுத்து நடைபெறும் உபகுழு கூட்டத்திற்கு சமுகமளிக்குமாறு கேட்டு அவருடன் பேசி இணக்கம் காண்பதுஎனஇக்கூட்டத்தின் இறுதியில் முடிவு செய்யப்பட்டுள்ளது.

---

தரப் பரீட்சையின் வினாத்தாள்கள் ஒப்பீட்டளவில் கடினமானவை என்ற காரணத்தைக் கூறி வழக்குத்தாக்கல் செய்வது குறித்தே தற்பொழுது ஆலோசிக்கப்பட்டு வருகிறது. விசேட பரீட்சையின் வினாத்தாளுடன் ஒப்பிடும் போது சாதாரண பரீட்சைக்கான வினாத்தாள் ஞர்களுடன் ஆலோசனை செய்யப்பட இருக்கிறது.

அதேவேளை 1991, 92 கல்வி ஆண்டுக்கான வெட்டுப் புள்ளித் திட்டத்தால் பாதிக்கப்பட்ட மாணவர்களும் தமது பாதிப்புக்குறித்து மற்றுமொரு வழக்கைத் தாக்கல் செய்வது குறித்தும் ஆலோசித்து வருகின்றனர் (க)(நி)

# உயர்கல்வி அமைச்சராக அநுரா பதவிஏற்றார்

உயர்கல்வி அமைச்சராக திரு அநுரா பண்டாரநாயக்கா நேற்று ஜனாதிபதி செயலகத்தில் ஜனாதிபதி திரு. டி பி விஜேதுங்க முன்நிலையில் சத்தியபிரமாணம் செய்துகொண்டார்.

இவருடன் பாராளுமன்ற உறுப்பினர் டபிள்யு ஜே. எம். லொக்குபண்டார கல்வி கலாசார அலுவல்கள் அமைச்சராகவும் திஸ்ஸ அத்தநாயக்க பல்கலைக்கழக விவகாரங்களுக்கான அமைச்சராகவும் பதவிப் பிரமாணம் செய்துகொண்டனர்.

பொறுப்புகள் மற்றும் இலாகாக்களில் மாற்றம் செய்யப்பட்டதை தொடர்ந்து அமைச்சர்கள், கருத்திட்ட அமைச்சர்கள், ராஜாங்க அமைச்சர்கள் பலரும் நேற்றையதினம் ஜனாதிபதி செயலகத்தில் சத்தியப்பிரமாணம் செய்து பதவிகளை ஏற்றுள்ளனர்.

---

## பிரதமமந்திரி

ஆகியோர் பல்கலைக்கழக வெட்டுப்புள்ளித் திட்டத்தால் மாணவர்கள் பாதிக்கப்பட்டிருப்பது குறித்தும் இதனால் ஏற்படும் விளைவுகள் குறித்தும் .பிரதமமந்திரி திரு ரணில் விக்கிரமசிங்கவுடன் விரிவானபேச்சுவார்த்தைகள் நடாத்தியுள்ளனர். இப்பேச்சுவார்த்தைகளின்போது இரு தமிழ் பாராளுமன்றஉறுப்பினர்களும் உடனிருந்ததாக தெரியவருகிறது.

இப் பேச்சுவார்த்தைகளின் முடிவில் மேற்படி விடயங்கள் குறித்து ஆராயும்படி பிரதமரின் ஆலோசகரான திரு. எரிக்சில்வா பிரதம மந்திரியால் பணிக்கப்பட்டிருக்கிறார்.

திரு. எரிக் சில்வா உயர் கல்வி அமைச்சர் மற்றும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுத்தலைவர் மற்றும் அதிகாரிகள் ஆகியோருடன் மேற்படி விடயம் குறித்து ஆராய்ந்து சாத்தியமான தீர்வுகள் குறித்து அமைச்சருக்கு அறிக்கை சமர்ப்பிப்பார் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (க),(நி)

---

## இராணுவத்

ராக நியமிக்கப்பட்டார். 1971 ஜே. வி. பி. கிளர்ச்சி காலத்தில் மொனராகலையில் கடமைபுரிந்தார்.

1980, 81 ஆம் ஆண்டு காலப் பகுதியில் மன்னார் மாவட்ட பொறுப்பதிகாரியாக செயற்படும் போதே அம்பாறை சண்டை. பயிற்சி கல்லூரியில் பயிற்சி பெற்றார்.

1988 இல் இராணுவ தலைமையகத்தின் நடவடிக்கைப் பொறுப்பதிகாரியாக நியமனம்பெற்று தொடர்ந்து கெமுனுவோர்ச் தளபதியாக இருந்த இவர் இந்தியாவிற்கு பயிற்சிக்காக சென்றார் 1989 இல் நாடு திரும்பிய சில்வா மேஜர் ஜெனரலாக பதவி உயர்வுடன் கிழக்கு பிராந்திய இராணுவ தலைமை அதிகாரியாக நியமிக்கப்பட்டார். கொப்பேகடுவவின் மறைவை யடுத்து வடபகுதிக்கான இராணுவப் பொறுப்பதிகாரியாக 1992 இல் நியமிக்கப்பட்டார். 1993 இல் நவம்பர் மாதம் வடபிராந்திய இராணுவ தளபதியாகவும், முப்படைகளின் இணைப்பதிகாரியாகவும் ஜனாதிபதி விஜேதுங்காவால் ஜெரிடி சில்வா நியமிக்கப்பட்டார்.

---

## 1500 தமிழ்

தமது பயணங்களை தொடர முடியாமலும் திரும்பி வர முடியாமலும் இவர்கள் அங்கு கடந்த இரண்டு வருடங்களாக இருந்து வருவதாக அங்கிருந்து வந்த கோண்டாவில் இளைஞர் ஒருவர் ஈழநாதத்திற்கு தெரிவித்தார்.

மேற்படி நபர்கள் யாழ். குடாநாட்டின் பல பகுதிகளிலும் இருந்து சென்றவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. இதில் 800ற்கு மேற்பட்ட யுவதிகளும் அடங்குவர்.

---

**வனமின்றிப்போனால்-நம் இனமின்றிப் போகும்**

# யாழ். இந்துக் கல்லூரி

## ஆண்டு ஆறு அனுமதி 1994

1993 ஆகஸ்டில் நடைபெற்ற ஐந்தாம் ஆண்டுப் புலமைப்பரிசில் பரீட்சையின் பெறுபேறுகளின் பிரகாரம் மாணவர்களுக்கு எமது கல்லூரியில் ஆண்டு 6 இல் அனுமதி வழங்கப்படவுள்ளது.

இவ்வனுமதிக்கான விண்ணப்பப் படிவத்தைக் கல்லூரி அலுவலக நேரத்தில் பெறுக்கொள்ளலாம்.

**விண்ணப்ப முடிவுத் திகதி 25.12.1993**

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி 18-12-93 — அதிபர் (சி-8158)

வலிகாமம் தெற்கு பிரதேசசபை

(சுன்னாகம், உடுவில் ஏழாலை உபஅலுவலகங்கள்)

## வரியிறுப்பாளருக்கு

1987ஆம் ஆண்டின் 15வது இலக்க பிரதேசசபைகள் சட்டத்தின் 41வது பிரிவின் கீழ் 1994ஆம் ஆண்டிற்கான

## ஆதனவரி பற்றிய அறிவித்தல்

1994ஆம் ஆண்டிற்கான ஆதனவரி கடந்த வருடாந்த மதிபபீட்டின்படி அறவிடப்படும். தற்போது அமுலிலுள்ள ஆதனவரி அறவீட்டு விகிதமே எதிர் வரும் ஆண்டிற்கும் மாற்றமின்றி அமுல் செய்யப்படும். ஆண்டு முழுவதற்குரிய வரித்தொகையை ஜனவரி 31ஆம் திகதிக்கு முன் செலுத்துவோருக்கு 10 வீதம் கழிவும், 1ஆம், 2ஆம், 3ஆம், 4ஆம், கந்தாயங்களுக்குரிய கட்டணத்தை முறையே ஜனவரி 31ஆம், ஏப்ரல் 30ஆம் ஜூலை 31ஆம், அக்டோபர் 31ஆம் திகதிக்கு முன் செலுத்துவோருக்கு 5 வீதம் கழிவும் வழங்கப்படும். 1ஆம் கந்தாய வரி மார்ச் 31ஆம் திகதிக்கு முன்பும் 2ஆம் கந்தாய வரி ஜூன் 30ஆம் திகதிக்கு முன்பும் 3ஆம் கந்தாயவரி செப்டெம்பர் 30ஆம் திகதிக்கு முன்பும் 4ஆம் கந்தாயவரி டிசம்பர் 31ஆம் திகதிக்கு முன்பும் செலுத்தப்படல் வேண்டும்.

செலுத்தத் தவறும் வரியிறுப்பாளர்கள் மீது குடியிருப்பு ஆதனமாயின் 15 வீதமும் வியாபார நோக்கத்திற்காகப் பாவிக்கப்படும் ஆதனமாயின் 20 வீதமும் பற்றாணைச் செலவாக அறவிடப்படும்.

ஆகவே வரியிறுப்பாளர்கள் நிலுவையின்றி உரிய காலங்களில பணத்தைச் செலுத்திசபையுடன் ஒத்துழைக்குமாறு பணிவன்புடன் வேண்டப்படுகின்றார்கள்

மேலும் 1993ஆம் ஆண்டு முடிய மின்சாரவரி நிலுவைகளையும், வியாபார உரிமக்கட்டணங்கள் மற்றும் வண்டி, துவிச்சக்கரவண்டி வரி என்பனவற்றையும் நிலுவையின்றி செலுத்துமாறும் கேட்டுக் கொள்கின்றேன்.

1994ஆம் ஆண்டுக்குரிய வண்டி, துவிச்சக்கர வண்டி வரிகள் வருட ஆரம்பத்தில் வழங்கப்படும் என்பதையும் அறியத்தருகின்றேன்.

செல்வி குமுளா கணிகாசலம்

# ஆசிரியர் வெற்றிடம் குறித்து ஆராய கொழும்பில் கூட்டம்

யாழ்ப்பாணம், கிளிநொச்சி முல்லைத்தீவு, மன்னார் ஆகிய மாவட்டங்களில் உள்ள ஆசிரியர் வெற்றிடங்களை நிரப்புவது தொடர்பான கூட்டம் ஒன்று அடுத்தமாதம் கொழும்பில் நடைபெறவுள்ளது.

மேற்படி கூட்டம் நிதியமைச்சின் செயலாளர் பாஸ்கரலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளதாக தெரியவருகின்றது. இம் மாவட்டங்களில் வெற்றிடங்கள் இல்லையென கல்வி அமைச்சு தெரிவித்ததை அடுத்தே இக் கூட்டம் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது: (சி)

## உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள்

**17 - 12 - 93**

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்:- 11714

வடபகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கம் 26-8424.

வடபகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கங்கள்

24-6699, 24-7078, 27-7081, 26-0512, 24-4238, 24-7267, 27-9492, 41-7297, 26-3893, 26-4376, 24-9337, 41-9480, 40-2677, 24-1250.


## எமது புதிய வெளியீடுகள்

(1) சத்தியராஜ் - கௌதமி
**ஏர்போர்ட்**

(2) அர்ஜுன் - குஷ்பூ
**ரோஜாவை கிள்ளாதே**

(3) கார்த்திக் - குஷ்பூ
**காத்திருக்க நேரமில்லை**

(4) "கோகுலம்" புகழ் ஜெயராம் - குஷ்பூ
**புருஷ லட்சணம்**

**வீடியோ விமல்**
**117, மானிப்பாய் வீதி**
**ஐந்து சந்தி, யாழ்ப்பாணம்.**

குறிப்பு:- குறித்த படங்கள் தணிக்கைக் குழுவின் பரிசீலனைக்குப் பின்னரே விநியோகிக்கப் படும். (சி-8157)

## உடன் விற்பனைக்குண்டு

பிறிமா- லோமன் 5 நாள் பிறவுண் பேட்டுக் குஞ்சுகள் உடன் விற்பனைக்குண்டு. ஓடர்களுக்கு புறோயிலர், சேவல் வெள்ளைப்பேட்டுக்குஞ்சுகள், ரோல்டன் கொமட் குஞ்சுகள் பெற்றுக் கொள்ளலாம்.

தொடர்பு,
'மல்லிகாபதி'


# ஆண்டு5 புலமைப் பரிசில் பரீட்சை யாழ். முடிவுகள் வெளிவந்தன

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் இவ் வருடம் நடைபெற்ற ஆண்டு 5 புலமைப் பரிசில் பரீட்சை பெறுபேறுகள் நேற்று யாழ்ப் பாணத்தில் வெளியாகின. இப்பரீட்சையில் கந்தரோடை தமிழ் கந்தையா வித்தியாலய மாணவன் பி பிரகாஸ் 190 புள்ளிகள் பெற்று முதலிடம் பெற்றமை தெரிந்ததே.

யாழ்: நகரில் உள்ள முன்னணிப் பாடசாலைகள் சிலவற்றின் பெறுபேறுகளும், வடமராட்சிப் பிரிவில் உள்ள பாடசாலைகளினது பெறுபேறுகளும் கிடைத்துள்ளன.

புனித ஜோன் பொஸ்கோ: 67மாணவர்கள் சித்தியடைந்துள்ளனர். இவர்களில் செல்வன் எஸ்.பிரணவன் 186 புள்ளிகள் பெற்றுள்ளார்.

பரி-யோவான் கல்லூரி 18 மாணவர்கள் சித்தியடைந்துள்ளனர். இவர்களில் செல்வன் எஸ். சபேசன் 186 புள்ளிகளும், செல்வன் கே; ஐங்கரன் 179 புள்ளிகளும் பெற்றுள்ளனர்.

சுண்டுக்குளி மகளிர் கல்லூரி: 12 மாணவர்கள் சித்தியடைந்துள்ளனர். இவர்களில் செல்வி சங்கரி இராஜேந்திரா 184 புள்ளிகளும், செல்வி லக்ஷனா கைலைநாதன் 170புள்ளிகளும் பெற்றுள்ளனர்.

கொக்குவில் இந்துக் கல்லூரி ஆரம்பப் பாடசாலை: 34பேர் சித்தியடைந்துள்ளனர். இவர்களில் எஸ். தர்சிகா 183 புள்ளிகளும். ஜே பிரசாந்தன் 173 புள்ளிகளும் எஸ் கௌசிகன் 172 புள்ளிகளும் பெற்றுள்ளனர்.

யாழ்.இந்து ஆரம்பப் பாடசாலை: 47 மாணவர்கள் சித்தியடைந்துள்ளனர் இவர்களில் செல்வன் வி. விபுலன் 180 புள்ளிகளும், செல்வன் எஸ், குணாலின் 177 புள்ளிகளும் பெற்றுள்ளனர்.

யாழ். இந்து மகளிர் ஆரம்பப் பாடசாலை: 29 மாணவர்கள் சித்தியடைந்துள்ளனர், இவர்களில் செல்வி எஸ். வித்தியா 176 புள்ளிகளும், செல்வி எஸ். சங்கீதா 174 புள்ளிகளும், செல்வி ரீ. சரண்யா 173 புள்ளிகளும் பெற்றுள்ளனர்.

யாழ். திருக்குடும்ப கன்னியர்மடம்: 7 மாணவர்கள் சித்தியடைந்துள்ளனர். இவர்களில் செல்வி வித்யா பிரான்ஸிஸ் 173புள்ளிகளும், செல்வி சுரனுகா இராசேந்திரா 159 புள்ளிகளும் பெற்றுள்ளனர்.

சென். பற்றிக்ஸ் கல்லூரி: எட்டு மாணவர்கள் சித்தியடைந்துள்ளனர் இவர்களில் செல்வன் என். கலைச்செல்வன் 152 புள்ளிகள் பெற்றுள்ளார்.

யாழ். மத்திய கல்லூரி: ஒருவர் சித்தியடைந்துள்ளார் ரீ. ராஜேந்திரம் என்பவர்141 புள்ளிகள் பெற்றுள்ளார்.

இதேவேளை நல்லூர்கொத்தணிப் பிரிவின் கீழ் காசிப்பிள்ளை மகாவித்தியாலயம்: 6மாணவர்களும், கல்வியங்காடு இந்து தமிழ்க் கலவன் பாடசாலை: 6 மாணவர்களும், சென். பெனடிக் பாடசாலை: 4 மாணவர்களும், சாதனா பாடசாலை: 4 மாணவர்களும், ஆனந்தா பாடசாலை: 2 மாணவர்களும் சித்தியடைந்துள்ளனர்.

**வடமராட்சிப் பிரிவில் சித்தியடைந்தோர்:**

பருத்தித்துறை கோட்டத்தில் புற்றளை மகா வித்தியாலய மாணவன் செல்வன் ஏ. சுதாகரன் 187 புள்ளிகளைப் பெற்று முன்னணியில் நிற்கின்றார்.

இக் கோட்டத்தில் தம்பசிட்டி மெ.மி.பாடசாலையில் நால்வர்; மேலைப் புலோலி சைவப்பிரகாச வித்தியாலயம்: ஆறுபேர்; புற்றளை ம. வித்தியாலயம்: 11 பேர்; வட இந்து மகளிர் கல்லூரி: 16 பேர்; தும்பளை சிவப்பிரகாசம்: 14பேர்சித்தியடைந்தனர்.

கரவெட்டிக் கோட்டத்தில் விக்னேஸ்வரா கல்லூரி: 5மாணவர்கள்; நெல்லியடி மெ. மி. த. க. பாடசாலை: 13 மாணவர்கள்; கரவெட்டி மாணிக்கவாசகர்: 5 மாணவர்கள்; தாமோதரா வித்தியாலயம்: 6 மாணவர்கள்; கம்பர்மலை அ. த. க. பாடசாலை: 5 மாணவர்கள்; உடுப்பிட்டி மகளிர் கல்லூரி: 8 மாணவர்கள்; வேதாரணியம் வித்தியாலயம். 4 மாணவர்கள் சித்தியடைந்துள்ளனர். (யோ, 22)

# ராணுவ தீர்வு காண்பது அரசின் நோக்கமல்ல

**-விமல் விக்கிரமசிங்கா**

வடக்கு - கிழக்குப் பிரச்சினைக்கு இராணுவத்தீர்வொன்றை அமுலாக்குதல் அரசின் நோக்கமல்ல பெருந்தொகையான மக்கள் ஏற்றுக்கொள்ளக் கூடிய நியாயமான ஓர் அரசியல் தீர்வை முன்வைப்பதில் அரசு அக்கறை கொண்டுள்ளது இவ்வாறு பாராளுமன்றவிவகார மற்றும் சுற்றாடல் துறை

தீர்வை எட்டும் வரையில் பலாத்காரத்தை அழிக்கவும் அப்பாவி மக்களின் உயிரையும், சொத்துக்களையும் பாதுகாக்கவும் அரசு தன்னாலான அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்ளும். இது தவிர வேறு வழியில்லை என்றார்

## வீரச்சாவு



**2-ம் லெப். ஞானமூர்த்தி**

11-11-93 அன்று நடைபெற்ற பூநகரி தளம் மீதான 'தவளை' நடவடிக்கையின் போது விழுப்புண் அடைந்திருந்த விடுதலைப் புலிகள் போராளி ஒருவர் நேற்று முன்தினம் வீரச்சாவு அடைந்தார்.

வீரச்சாவு அடைந்த 2ஆம் லெப்டினன்ட் ஞானமூர்த்தி (இராசலிங்கம் அன்பழகன், 32, சட்டநாதர் வீதி, நல்லூர்) எனும் போராளிக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றனர்

சுழிவும் வழங்கப்படும். 1ஆம் கந்தாய வரி மார்ச் 31ஆம் திகதிக்கு முன்பும் 2ஆம் கந்தாய வரி ஜூன் 30ஆம் திகதிக்கு முன்பும் 3ஆம் கந்தாயவரி செப்டெம்பர் 30ஆம் திகதிக்கு முன்பும் 4ஆம் கந்தாயவரி டிசம்பர் 31ஆம் திகதிக்கு முன்பும் செலுத்தப்படல் வேண்டும்.

செலுத்தத் தவறும் வரியிறுப்பாளர்கள் மீது குடியிருப்பு ஆதனமாயின் 15 வீதமும் வியாபார நோக்கத்திற்காகப் பாவிக்கப்படும் ஆதனமாயின் 20 வீதமும் பற்றாணைச் செலவாக அறவிடப்படும்.

ஆகவே வரியிறுப்பாளர்கள் நிலுவையின்றி உரிய காலங்களில பணத்தைச் செலுத்திசபையுடன் ஒத்துழைக்குமாறு பணிவன்புடன் வேண்டப்படுகின்றார்கள்

மேலும் 1993ஆம் ஆண்டு முடிய மின்சாரவரி நிலுவைகளையும், வியாபார உரிமக்கட்டணங்கள் மற்றும் வண்டி, துவிச்சக்கரவண்டி வரி என்பனவற்றையும் நிலுவையின்றி செலுத்துமாறும் கேட்டுக் கொள்கின்றேன்.

1994ஆம் ஆண்டுக்குரிய வண்டி, துவிச்சக்கர வண்டி வரிகள் வருட ஆரம்பத்தில் வழங்கப்படும் என்பதையும் அறியத்தருகின்றேன்.

**செல்வி தனுஜா தணிகாசலம்**
விசேட ஆணையாளர்
வலிகாமம் தெற்கு
பிரதேசசபை.

வலிகாமம் தெற்கு
பிரதேசசபை,
சுன்னாகம்,
16-12-1993

(சி-8150)

## பல்கலைக்கழக அனுமதி கிடைக்கவில்லையா?

## நீங்களும் பட்டதாரியாகலாம்

பேராதனை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகங்களின் வெளி நிலைப் பட்டப் பாடநெறிகளான

- **கலைமாணி B. A.**
- **வணிகமாணி B. Com.**
- **விஞ்ஞானமாணி B. Sc.** புள்ளிவிபரவியல்

க. பொ. த. உயர்தரம் 3 பாடங்களில் சித்தி அல்லது பயிற்றப்பட்ட ஆசிரியர்கள் ஆகியோர் விண்ணப்பிக்கலாம்.

**விரிவுரைகள் ஆரம்பமாகிவிட்டன**

விபரங்களுக்கு —

**உதவிப்பதிவாளர்,**

**பட்டப்படிப்புகள் கல்லூரி**

**148/1, ஸ்ரான்லிவீதி, யாழ்ப்பாணம்.**

(சி-8160)

## A/L94

**பளிங்கு**

***DAY CLASSES***

**கணித - விஞ்ஞான**

**துரித மீட்டல் வகுப்புக்கள்**

**ஆரம்பம்:- 20. 12. 93**

**திங்கள் பி. ப. 3. 00மணி**

(A/L 96வகுப்புக்கள் விரைவில் ஆரம்பிக்கப்படும்)

**பளிங்கு**
(5079)

பிரதான வீதி,
சாவகச்சேரி.

**புருஷ லட்சணம்**

## வீடியோ விமல்

***117, மானிப்பாய் வீதி***

**ஐந்து சந்தி, யாழ்ப்பாணம்.**

குறிப்பு:- குறித்த படங்கள் தணிக்கைக் குழுவின் பரிசீலனைக்குப் பின்னரே விநியோகிக்கப் படும்.

(சி-8157)

## உடன் விற்பனைக்குண்டு

பிறிமா- லோமன் 5 நாள் பிறவுண் பேட்டுக் குஞ்சுகள் உடன் விற்பனைக்குண்டு. ஓடர்களுக்கு புறோயிலர், சேவல் வெள்ளைப்பேட்டுக்குஞ்சுகள், சோல்டன் கொமட் குஞ்சுகள் பெற்றுக்கொள்ளலாம்.

தொடர்பு,
'மல்லிகாபதி'
சந்தை கிழக்கு ஒழுங்கை
மானிப்பாய்

(9461)

கர்த்தருக்கு தோத்திரம்

**இலங்கை பெந்தெகொஸ்தே சபை**

**வருடாந்த**

## சிறுவர் தின விழா

காலம்: ***1993. 12. 18 பி. ப. 2 மணி***

இடம்: ***111, கண்டி வீதி, சுண்டுக்குளி***

யாவரையும் அன்புடன் அழைக்கிறோம். (6921)

## மாருதி வீடியோ விஷனின்

**புதிய வெளியீடுகள்**

☞ **உழவன்:-**
பிரபு, பானுப்பிரியா, சுஜாதா, செந்தில்.

☞ **ரோஜாவை கிள்ளாதே:-**
அர்ஜுன், குஷ்பூ, கவுண்டமணி செந்தில்.

☞ **ஏர்போர்ட்:-**
சத்தியராஜ். கௌதமி, செந்தில்.

☞ **காத்திருக்க நேரமில்லை:-**
கார்த்திக், குஷ்பூ, கவுண்டமணி.

☞ **புருஷலட்சணம்:-**
அபிமான நட்சத்திரம்.

☞ **யார் யாருக்கு மாப்பிள்ளை:-**
மற்றும் சின்னஜமீன், எங்கமுதலாளி, ஒரிஜினல் பிரதிகளாக வெளியாகியுள்ளன.

(சி/8156)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி 31ஆம் இலக்கத்திலுள்ள ஈழநாதம் பணிமனையில் 1993ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 18ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

களும் பெற்றுள்ளனர்.

யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை: 47 மாணவர்கள் சித்தியடைந்துள்ளனர் இவர்களில் செல்வன் வி. விபுலன் 180 புள்ளிகளும், செல்வன் எஸ், குணாலின் 177 புள்ளிகளும் பெற்றுள்ளனர்.

யாழ். இந்து மகளிர் ஆரம் ... லய மாணவன் செல்வன் ஏ. சுதாகரன் 187 புள்ளிகளைப் பெற்று முன்னணியில் நிற்கின்றார்.

இக்கோட்டத்தில் தம்பசிட்டி மெ.மி.பாடசாலையில் நால்வர்; மேலைப் புலோலி சைவப்பிரகாச வித்தியாலயம்: ஆறுபேர்; புற்றளை

## ராணுவ தீர்வு காண்பது அரசின் நோக்கமல்ல

**-விமல் விக்கிரமசிங்கா**

வடக்கு - கிழக்குப் பிரச்சினைக்கு இராணுவத்தீர்வொன்றை அமுலாக்குதல் அரசின் நோக்கமல்ல பெருந்தொகையான மக்கள் ஏற்றுக்கொள்ளக் கூடிய நியாயமான ஓர் அரசியல் தீர்வை முன்வைப்பதில் அரசு அக்கறை கொண்டுள்ளது இவ்வாறு பாராளுமன்றவிவகார மற்றும் சுற்றாடல் துறை அமைச்சர் கலாநிதி விமல் விக்கிரமசிங்கா பாராளுமன்றத்தில் கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கும் போது கூறினார்.

மேலும் அவர்-

அதேவேளை, சமாதானத் தீர்வை விரும்பாத ஒரு சிலரினது நிபந்தனைகளுக்கு விட்டுக்கொடுக்க அரசு தயாராக இல்லை சிறிலங்காவின் ஐக்கியத்துக்கும், ஒற்றுமைக்கும் பங்கம் ஏற்படாத வகையிலேயே சமாதானமான தீர்வு காணப்படும் அப்படியான அரசியல் தீர்வை எட்டும் வரையில் பலாத்காரத்தை அழிக்கவும் அப்பாவி மக்களின் உயிரையும், சொத்துக்களையும் பாதுகாக்கவும் அரசு தன்னாலான அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்ளும். இது தவிர வேறு வழியில்லை என்றார்



## 2-ம் லெப். ஞானமூர்த்தி

11-11-93 அன்று நடைபெற்ற பூநகரி தளம் மீதான 'தவளை' நடவடிக்கையின் போது விழுப்புண் அடைந்திருந்த விடுதலைப் புலிகள் போராளி ஒருவர் நேற்று முன்தினம் வீரச்சாவு அடைந்தார்.

வீரச்சாவு அடைந்த 2ஆம் லெப்டினன்ட் ஞானமூர்த்தி (இராசலிங்கம் அன்பழகன், 32, சட்டநாதர் வீதி, நல்லூர்) எனும் போராளிக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றனர்

## கத்தோலிக்க சமயபாட கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

கத்தோலிக்க சமயபாட ஆசிரியர்களுக்கான சேவைக் காலக் கருத்தரங்கு நாளை மறுதினம் திங்கட்கிழமை காலை 8-30 மணிக்கு யாழ். மறைக்கல்வி நிலையத்தில் நடைபெறவுள்ளது. இக்கருத்தரங்கில் சகல கோட்டங்களையும் சேர்ந்த ஆசிரியர்களையும் கலந்துகொள்ளுமாறு யாழ் மாவட்ட ஆசிரிய ஆலோசகர் கேட்டுள்ளார்

## உதைபந்தாட்டம்

குருநகர் புனித யாகப்பர் ஆலய புனர்நிர்மாண நிதிக்காக பாடும்மீன் விளையாட்டுக் கழகம் நடாத்தும் உதைபந்தாட்டப் போட்டியில் இன்று மாலை 3.00மணிக்கு அரியாலை விளையாட்டுக் கழகம் எதிர் பாடும்மீன்விளையாட்டுக்கழகமும், 4.00மணிக்கு சென்- மேரிஸ் விளையாட்டுக் கழகம் எதிர் சென். அன்ரனிஸ் விளையாட்டுக் கழகமும் மோதவுள்ளன.

இப்போட்டிகள் யாழ். சென்ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெறும்.

## எடிசன் அக்கடமி

**(யாழ். இந்துக்கல்லூரி அருகாமையில்)**

**411/1 கே. கே. எஸ். வீதி,**

**யாழ்ப்பாணம்.**

***SPOKEN ENGLISH***

**BY**

## BRITTO

ஆரம்பம்

***19.12.93* ஞாயிறு பி. ப 2 மணி**

**(வியாழன்— வெள்ளி 4.30—5.30 மணி)**

(சி-8161)

## மரண அறிவித்தல்

## அரியகுட்டி நடராஜா

**(பூசகர்)**

அளவெட்டி வடக்கு மயிலாந்தர் வளவை பிறப்பிடமாகவும், தற்போது உரும்பராய் தெற்கில் வசித்தவருமாகிய அரியகுட்டி நடராஜா 17-12-93இல் காலமானார். இவர் திருப்பதியின் அன்புக் கணவரும் நாகேந்திரன், கலாவதி, இராசேந்திரன், தியாகேந்திரன், உருத்திரன், பகிரதன் ஆகியோரின் அன்புத் தந்தையும் பகவதி, ஈஸ்வரி, நிரஞ்சனா ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார் அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று (18-12-93) சனிக்கிழமை பி. ப 1மணியளவில் முத்து வீதி, உரும்பராய் தெற்கு, உரும்பராயில் உள்ள இல்லத்தில் நடைபெற்று வேம்பன் மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும் இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறோம்.

தகவல்:-

**மகன் ந. இராசேந்திரன்**
**(இந்திரன்)**

முத்து வீதி,
உரும்பராய் தெற்கு,
உரும்பராய்.

(சி-8162)